RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இன்னா நாற்பது, இனியவை நாற்பது கூறும் உணவு குறித்த அறங்கள்

**பு. ரம்யா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி, பேரூராதீனம், பேரூர், கோயம்புத்தூர்-10. தமிழ்நாடு, இந்தியா.

# Virtues about Food That Say Forty Inna and Forty Iniyavai

**B. Ramya** [a, *]

[a] Department of Tamil, Thavathiru Santhalinga Adigalar Arts Science Tamil College, Perur Aadheenam, Perur, Coimbatore – 10, Tamil Nadu, India

* Corresponding Author:
ramyab@gmail.com

Received: 11-04-2024
Revised: 22-06-2024
Accepted: 30-06-2024
Published: 30-07-2024

Check for updates

**ABSTRACT**

Prioritizing nutrition is essential for sustaining life. Such nourishment must be made available to all living beings. Human life, guided by morality, should be peaceful and harmonious. A person who lives without adhering to morality possesses only five senses. In this context, morality should be upheld in all actions. Various Tamil literary works, medicine, and tradition discuss different aspects of food in various contexts. However, information about food is found only in some books. Among these, there are sixteen books that specifically discuss various aspects of food, including the two books that focus on delicious food. These are elucidated in the essay titled. The Various Aspects of Food Discussed in the pathinenkizhkanakku book on Delicious Food.

**Keywords:** Virtue, Food, Inna Naarpathu, Iniyavai Naarpadhu, Pathinenkizhkanakku, Discernment, Nonkilling, Commonality, Suffering, Goodness.

## முன்னுரை

உணவு என்பது மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று. உணவின் அருமையை, “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” என்று மணிமேகலையும் புறநானூறும் குறிப்பிடுகின்றன. இத்தகைய உணவு பலவகைப்படும். அவ்வாறு நமக்குக் கிடைக்கும் பலவகை உணவுகளையும் உண்பதற்கு முன்னர் நாம் உண்ணும் உணவு அறம் சார்ந்து உள்ளதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்மால் உலகின் எந்த ஒரு உயிர்க்கும் எந்தத் தீங்கும் நிகழக்கூடாது என்பதைச் சிந்தித்துச் செயலாற்றுதல் அறம் ஆகும். உணவு உண்ணும்போதும் அது பிற உயிர்களுக்கு எவ்வகையிலும் தீங்கு விளைவிக்கும் வண்ணம் அமைந்துவிடக்கூடாது. அவ்வகையில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாகிய இன்னா நாற்பது, இனியவை நாற்பது ஆகிய இரு நூல்களும் உணவு குறித்த பல்வேறு அறங்களை எடுத்துக்கூறுகின்றன. அவற்றை விளக்குவதாக “இன்னா நாற்பது இனியவை நாற்பது கூறும் உணவு குறித்த அறங்கள்” என்ற இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

## இன்னா நாற்பதும் இனியவை நாற்பதும்

பதினெண்கீழக்கணக்கு அற நூல்களில் இன்னா நாற்பது, இனியவை நாற்பது ஆகிய இரு நூல்களும் அறம் சார்ந்த நூல்களாக அமைகின்றன. இவற்றுள் இன்னா நாற்பது கபிலரால் பாடப்பட்ட நாற்பது பாடல்களைக் கொண்டது. மனதிற்கும் உடலிற்கும் துன்பம் தரக்கூடிய நான்கு கருத்துகளை

ஒவ்வொரு பாடலிலும் எடுத்துக்கூறி இதுபோன்ற செயல்களைச் செய்யக்கூடாது எனக் கூறும் நூல். இனியவை நாற்பது பூதஞ்சேந்தனாரால் இயற்றப்பட்ட நூலாகும். இது உடலுக்கும் மனதிற்கும் நன்மை பயக்கும் மூன்று கருத்துகளை ஒவ்வொரு பாடலிலும் எடுத்துக்கூறும் நாற்பது பாடல்களைக் கொண்ட நூலாகும்.

## பகுத்து உண்ணும் அறம்

பகுத்து உண்ணுதல் என்பது மனித வாழ்வில் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். ஒவ்வொருவரிடத்தும் இப்பண்பு இருக்குமானால் உலகில் உள்ள அனைவரிடத்தும் பசி நீங்கும். நூல்வல்ல சான்றோர்கள் கூறும் தலையாய அறங்களுள் முதன்மையானது பகுத்து உண்ணுதல் என்பதாகும். இதை வள்ளுவர்,

“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை” (குறள் எண் - 322)

என்ற குறள்வழி குறிப்பிடுகிறார். இதே கருத்தை ஔவையாரும் ஆத்திச்சூடியில்,

“ஐயமிட்டு உண்” (ஆத்திச்சூடி - 9)

என்று குறிப்பிடுகிறார். இதே கருத்தை இன்னா நாற்பதில் கபிலர்,

“பாத்து உணல் இல்லாருழைச் சென்று உணல் இன்னா” (பாடல் எண் - 21, பா.அ - 2)

என்ற பாடலடி வழி குறிப்பிடுகிறார். பகுத்து உண்ணும் பண்பு இல்லாதவனிடம் சென்று உண்ணுதல் துன்பத்தைத் தரும் என்பது இவ்வடியின் பொருளாகும். பகுத்து உண்ணும் பண்பு இல்லாதவன் பிறருக்கு வழங்குவதற்குத் தயங்குவான். முழு மனதுடனும் தரமாட்டான். இச்சூழலில் அவனிடம் பெறும் உணவு அனைவருக்கும் பசியைப் போக்காது. மேலும் பாவத்தையே தரும். அதனால் பகுத்துஉண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்று கூறுகிறார்.

## கொலை மறுத்தல்

எல்லா உயிருக்கும் இன்பம் பயத்தல் அறமாகும். அவ்வகையில் நமது உணவுக்காகப் பிற உயிர்களைத் துன்புறுத்தக் கூடாது. இதை வள்ளுவர்,

“கொல்லான் புலால் மறுத்தானை கைகூப்பி

எல்லா உயிரும் தொழும்” (குறள் - 260)

மற்றும்,

“தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்

எங்ஙனம் ஆளும் அருள்” (குறள் - 251)

ஆகிய குறள்களின் வழி குறிப்பிடுகிறார். இதை ஒத்த கருத்தில் இன்னா நாற்பதில் கபிலர்,

“ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல்முன் இன்னா” (பாடல் எண் - 22. பா.அ - 2)

என்ற பாடலடி வழி விளக்குகிறார். அதாவது நம்முடைய உடம்பை வளர்ப்பதற்காகப் பிற உயிர்களின் தசையைத் தின்பது துன்பத்தைத் தரும். அதைத் தவிர்த்தால் உடலுக்கும் உளத்திற்கும் இனிமை பயக்கும் என்று எடுத்துரைக்கின்றார். மேலும்,

“புலை உள்ளி வாழ்தல் உயிர்க்கு இன்னா” (பாடல் எண் - 12, பா.அ - 3)

என்று குறிப்பிடுகிறார். அதாவது புலால் எனப்படும் அசைவத்தை விரும்பி உண்ணுதல் உயிருக்குத் துன்பத்தைத் தரும் என்று குறிப்பிடுகிறார்.

## தவிர்க்க வேண்டியது

எல்லோருக்கும் பயன்படக்கூடிய எல்லோருக்கும் நன்மை தரக்கூடிய உணவாக இருந்தாலும் அது உணவை விளைவிக்கும் விதைப்பயிராக இருந்தால் அதைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும் என்று இனியவை நாற்பது நூல் வழி பூதஞ்சேந்தனார் குறிப்பிடுகிறார். இதை,

"வித்திற்குற் றுண்ணா விருப்பம் மிக இனிது" (பாடல் எண் - 40, பா.அ - 2)

என்ற பாடலடிகள் வழி குறிப்பிடுகிறார். இதே கருத்தை திருவள்ளுவர்,

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை" (குறள் - 1031)

என்ற குறள்வழி குறிப்பிடுகிறார். எனவே பஞ்சம் போன்ற மிகக் கடினமான சூழல் ஏற்பட்டாலும் கூட விதைக்காக வைக்கப்பட்டிருக்கும் தானியங்களை உணவுக்காகப் பயன்படுத்துதல் கூடாது என்ற அரிய கருத்தை இனியவை நாற்பது நூலில் பூதஞ்சேந்தனார் பதிவு செய்கிறார்.

## உணவின் பொதுமை

"செல்வத்துப் பயனே ஈதல்" (புறம் - 189) என்று குறிப்பிடுகிறார் நக்கீரர். அதாவது பெற்ற செல்வத்தின் பெரும்பயன் மற்றவருக்கு அதைக் கொடுப்பது ஆகும். இந்நிலை செல்வத்தில் மட்டுமல்லாது உணவிலும் இருக்கவேண்டும் என்று இன்னா நாற்பது குறிப்பிடுகிறது. இதை,

"உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பு இன்னா" (பாடல் எண் - 16, பா.அ - 1)

அதாவது உணவுக்காகக் கூடச் செலவிடாமல் நாம் சேர்த்து வைக்கக்கூடிய பெருஞ்செல்வம் என்பது நமக்குத் துன்பத்தையே தரும். உணவு, உடை, இருப்பிடம் என்ற அடிப்படைத் தேவைகளுள் முதலாவதாக இருக்கும் உணவுக்காகச் சேர்த்த பொருளைச் சேமிக்க எண்ணினால் அதனால் நமக்குத் துன்பமே ஏற்படும். நமக்கும் பிறருக்கும் உணவுக்கான செலவுகளைத் தயங்காது செய்தல் வேண்டும் என்றும் உணவு என்பது அனைவருக்கு பொதுவானது என்றும் இன்னா நாற்பது வலியுறுத்துகிறது. இக்கருத்தைத் தேசியக் கவி பாரதியார்,

"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்

சகத்தினை அழித்திடுவோம்" என்று குறிப்பிடுகிறார்.

## தகுந்த இடத்தில் உண்ணுதல்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய நாலடியார் சுற்றந்தழால் என்ற அதிகாரத்தில்,

"பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்

அக்காரம் பாலோடு அமரர்கைத்து உண்டலின்

உப்பிலி புற்கை உயிர்போல் கிளைஞர்மாட்டு

எக்காலத் தானும் இனிது." (நாலடியார் - சுற்றந்தழால் - பா.எ 6)

என்று குறிப்பிடுகிறது. பொன்னால் ஆன கலத்தில் புலிநகம் போன்ற வெண்மையான அரிசியால் செய்த சோற்றைச் சர்க்கரையுடன் பாலும் கலந்து தர அதைப் பெற்று உண்பதை விட, உப்பில்லாத புல்லரிசிக் கூழை உயிர் போன்ற சுற்றாரிடத்து எந்தக் காலத்திலும் உண்டு வாழ்தல் இனிமை தரும் என்பது இப்பாடல் தரும் பொருளாகும்.

இதே கருத்தை இனியவை நாற்பது நூலில் பூதஞ்சேந்தனார்,

"உயிர்சென்று தான்படினும் உண்ணார் கைத்துண்ணாப்

பெருமைபோல் பீடுடையது இல்" (பாடல் எண் - 11, பா.அ - 3,4)

என்ற பாடல் வழி குறிப்பிடுகிறார். அதாவது மிகுந்த பசி ஏற்பட்டு உயிரே போகும் நிலை வந்தாலும் கூட உண்ணத்தகாதார் இல்லத்தில் உண்ணுதல் கூடாது என்பது இப்பாடலடிகளின் பொருளாகும்.

## முடிவுகள்

உணவு குறித்த அறத்தில் பகுத்துண்ணுதல் தலையாயதாக இருந்த நிலை விரிவாக எடுத்துக்கூறப்பட்டது. தனது உயிரை வளர்ப்பதற்காகப் பிற உயிர்களைக் கொல்லுதல் மிகுந்த துன்பத்தை விளைவிக்கும் என்ற செய்தி எடுத்துக்கூறப்பட்டது. எக்காரணத்தைக் கொண்டும் விதைக்கான தானியங்களைப் பயன்படுத்தக்கூடாது என்ற செய்தி பெறப்பட்டது. உணவு என்பது எல்லோருக்கும் பொதுவானது. அதை இருப்பவர்கள் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்ற செய்தி எடுத்துக் கூறப்பட்டது. உண்ணத்தாகதவர் இடத்தில் எக்காலத்தும் உண்ணக்கூடாது என்ற செய்தி பெறப்பட்டது. முடிவாக உணவு என்பதை மிக முதன்மையாகக் கொண்டு அதற்கெனத் தனி அறங்களை வகுத்து அதன்வழி வாழ்ந்து வந்தனர் என்ற செய்தி இவ்வாய்வுக் கட்டுரையின் வழி எடுத்துக்கூறப்படுகிறது.

## References


கபிலர் - இன்னா நாற்பது, சக்தி காரியாலயம், மதுரை. முதற்பதிப்பு: மே, 1944

பூதஞ்சேந்தனார் - இனியவை நாற்பது, புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், 38, வேங்கட நகர், புதுச்சேரி-605011, பதிப்பு: 1987.

திருவள்ளுவர் - திருக்குறள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. பதிப்பு: 1998.

நாலடியார், சரண் புக்ஸ், சென்னை. பதிப்பு: 2021.

புறநானூறு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை. முதற்பதிப்பு: 1947.

ஔவையார் - ஆத்திச்சூடி, சாரதா பதிப்பகம், சென்னை. பதிப்பு: 2003.

பாரதியார் - பாரதியார் பாடல்கள், பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி - 2. பதிப்பு: 1997.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License